# வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார்? - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், வாழ்க்கை ஆச்சரியம் நிறைந்திருப்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். ஒருநாள் நீங்க ரொம்ப சந்தோஷமா இருப்பதாக தோன்றும், மறுநாள் மருத்துவர் உங்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராத பெலவீனம் இருப்பதாக சொல்லலாம். விபத்துகள், இயற்க்கை சீற்றங்கள், குற்றங்கள், இயலாமை போன்றவை எந்த நொடியிலும் வாழ்க்கையை திருப்பி போடா வாய்ப்புண்டு. அப்படி நடக்கும் போது, ஜனங்க கேட்ப்பாங்க, "வாழ்க்கையில் இந்த மாதிரியான வேதனைகளில் தேவன் எங்கதான் இருக்காரு? அப்படி பட்ட மக்கள் அவர்களை காட்டிலும் அதிக வலியும் வேதனையும் அனுபவிக்கும் மக்களிடமிருந்து பதில்களை பெற வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட இரண்டு பேரை பார்க்க இருக்கிறோம்.

ஜோனி எரிக்சன் டாடா தனது பதினேழு வயதில் நீச்சலடிக்க குதித்த போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டார்கள், அதினால் குவாட்ரிப்லீகியா ஏற்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் தான் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, அவர்களுக்கு

மார்பக புற்றுநோயும் இருக்கிறது, ஒவ்வொரு நாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார்கள். Dr. மைகேல் எஸ்லே இவர் மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தார், ஆனால் தாங்க முடியாத கடுமையான வேதனை உண்டான போது ராஜினாமா செய்துவிட்டார். அவர் வேதனை மிகுந்த பல அறுவை சிகிச்சைகளை செய்து இருக்கிறார், மருத்துவர்கள் அவருடைய தண்டுவடத்தின் அனைத்து தட்டுகளையும் அகற்றி அவருடைய ஜீவனை காப்பாற்ற எல்லா எலும்புகளையும் ஒன்று சேர்த்து தண்டுவடத்தை நிற்க வைத்திருக்கிறார்கள். இப்போது அவர் பிறேன்ட்வுட் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையை நடத்தி வரும் போதகராக இருக்கிறார், டேநேன்சீ, ஆனாலும் ஒவ்வொருநாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார். வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார் என்பதற்கு இவர்கள் இருவரும் பதிலளிக்க இருக்கிறார்கள். இந்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷித்த தொகுப்பை காண அன்போடு அழைக்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கேர்பெர்க், நிகழ்ச்சியை பார்ப்பதற்கு நன்றி. நீங்கள் கேள்விபட்டது போல, இன்றைக்கு சிறப்பான 2 விருந்தினர்கள் இருக்கிறார்கள், ஜோனி எரிக்சன் டாடா மற்றும் Dr. மைகேல் எஸ்லே. இன்றைக்கு நாம் துவங்க இருக்கும்

காரியம் என்னவென்றால் அதாவது, வாழ்க்கை ஆச்சரியங்கள் நிறைந்து இருக்கிறது. சிறந்த நண்பர் ஒருவர் இருக்கிறார், ஒரு பாஸ்டர், அவர் கோவிற்கு சென்றார், கருத்தரங்கில், பிரசங்கித்துகொண்டு இருந்தார். சிறப்பான பிரசங்கமாக இருந்தது, முடித்து வீட்டிற்கு வந்து படுத்தார், அன்பான முத்தங்களால் மனைவிற்கு குட்நைட் சொன்னார், அவர்களிடம், "இ லவ் யூ, ஹனி என்றார்." காலையில் அவர்கள் அவரை எழுப்பியபோது அவர் மரித்து கிடந்தார். ஆச்சரியம்.

என்னுடைய நண்பர் ஒருவர் தொழில்நுட்ப மேதை, கணினி நிறுவனங்களில் இரவு நெடுநேரம் வரைக்கும் வேலை செய்பவர்களில் ஒருவர். நல்ல சம்பாத்தியம், மனைவி பிள்ளைகள். திடீருன்னு ஒருநாள், பூம், ஆச்சரியம், அவருக்கு முடக்குவாதம் வந்து அவருடைய கை கால் மற்றும் ஒரு பகுதியின் மூளை வேலை செய்யாம போயிடுச்சு. என்னுடைய தாயார் ALS வியாதியால் பாதிக்கப்பட்டிருந்த தனது சிநேகிதியை இரண்டு வருடங்கள் பராமரித்து வந்தார்கள். அவர்களை அடக்கம் செய்த பிறகு, அவர்களுடைய வேதனைகளையும் வலிகளையும் இரண்டு வருடங்களாக பார்த்த இவர்கள், என்னோட அம்மாவும் தன்னை பரிசோதிக்கும்படி போனாங்க. அப்பத்தா மருத்துவர்கள் "ALSசின் துவக்க நிலையாக இருப்பதை கூறினார்கள்." அப்ப என்னோட தாயாருக்கு, ஒரு விஷயம் தெளிவாக

தெரிந்தது அதாவது அவங்கள மாதிரியே இரண்டு வருடங்கள் தான் எனக்கும் இருக்கும். ஆச்சரியம்.

உங்களில் அநேகர் மருத்துவர்கள் சொல்வதை கேட்டிருப்பீர்கள், அதாவது, “இன்னைக்கு உங்களுக்கு நல்ல விஷயத்தை சொல்லும் வாய்ப்பு எனக்கு கிடைக்கல.” அதற்கு அப்பறமா என்ன விஷயம் என்பதை உங்களுக்கு வெளிபடையா சொல்வாங்க. நீங்கள் ஆச்சரியங்களோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள் என்ன செய்வதென்று தெரியாத நிலை. உங்களுடைய குழந்தையை இழந்திருக்கலாம், உங்கள் கணவர் உங்களை விட்டு சென்றிருக்கலாம், அல்லது உணர்ச்சி பூர்வமான வலி வேதனை இருக்கலாம்.

என்னுடைய இரண்டு விருந்தினர்களும் உங்களுக்காக இங்கு வந்திருக்கும் இந்த நேரத்திலும் கூட வேதனைகளை சகித்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஜோனி எரிக்சன் டாடா அசைவே இல்லாத நிலையில் தனது பதினேழு வயதில் உண்டான விபத்திலிருந்து இப்படிதா இருக்காங்க. அந்த நாளில் இருந்து சக்கர நாற்காலியில் தான் அவர்கள் வாழ்க்கை. ஒவ்வொரு நாளும் பலவிதமான வலி வேதனை அவர்களுக்கு உண்டாகிறது. இருந்தாலும் அவங்களோடு முகத்துல இருக்கிற அந்த புன்னகை நம்மை மூச்சடைக்க வைக்கிறது. மைகேல் எஸ்லே இவர் மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தார், தேசத்தின் பிரசித்திபெற்ற கருத்தரங்கு பேச்சாளரும் கூட, திடீரென்று ஏற்பட்ட முதுகு வலி - என்ன நடந்ததென்று அவரே

சொல்லுவார் - இந்த வலி அந்த கழகத்தின் முதல்வர் பணியை தொடர முடியாத படி அவரை தடுத்து விட்டது.

சரி, மைகேல், உங்களிடமிருந்து துவங்கிடலாம், ஏன்னா நீங்க வழக்கமா ஒரு கூற்றை சொல்லி தான் துவங்கிடுவீர்கள் என்று நன்றாக தெரியும்: எல்லா நிலைகளிலும் கைவிடப்பட்ட சூழ்நிலையில் மக்கள் பொதுவா என்ன செய்வாங்க? உங்க கணவரால உதவ முடியாது, உங்க மனைவியால உதவ முடியாது, உங்களுடைய உயிர் நண்பனால உதவ முடியாது, மருத்துவர்களால உதவ முடியாது, சொந்தங்களால உதவ முடியாது, சபையால கூட உங்களுக்கு உதவ முடியாது. அப்ப நீங்க எந்த பக்கம் திரும்புவீங்க?

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:** அதாவது, ஜான், என்னோட வலி 2000 வது ஆண்டுல தொடங்குச்சு கொஞ்சம் கொஞ்சமா அதிகமாயிட்டே இருக்குது. இதை தண்டுவட இடமாற்ற நோய் என்று சொல்வாங்க, அதாவது இது தண்டுவடத்தில் இருக்கிற 22 நிலை மாற்றத்தினால் உண்டாகும் பிரச்சனை. இதை கண்டு பிடிப்பதற்குள் நீங்க, உங்க அலமாரி முழுவதும் மருந்துகளால் நிரப்பி வைத்திருப்பீங்க, மருத்துவத்தில் இருக்கிற  மேல்நிலை மருந்துகளை எடுக்க வேண்டியிருந்தது, மயக்கமா இருக்கும், சோர்வா இருக்கும், ஆனாலும் அந்த வலி மாறாம அப்படியே தான் இருக்கும். எங்களோட வடக்கு விர்ஜினியாவின் சின்ன வீட்டில் உட்கார்ந்திருநத்தை என்னால் மறக்கவே முடியாது. என்னோட கன்னத்துல கண்ணீர் ஓடிட்டே

இருக்கும், தாங்க முடியாத வலியோடு அங்க உட்கார்ந்திருப்பேன். அப்ப நா சிண்டிய பார்த்து சொன்னேன், ஏன் ஜனங்க தங்களோட வாழ்க்கையை முடித்துகொள்கிறார்கள் என்று இப்பதா புரியுது.” அந்த பாலத்தில் இருந்து கீழ குதிச்சிடலாம் போல தோணும். இப்ப, அப்படி இல்ல, ஆனா அந்த எண்ணம் கூட எனக்கு தோன்றியிருக்கிறது. புரிஞ்சுக்கிட்டேன். அந்த மாதிரியான இருண்ட கட்டத்தை எதிர்கொள்ளும்போது ஜோனியோட நண்பர்களும் என்னோட நண்பர்களும் சொல்றது போல அந்த இருண்ட குகைக்குள் மூன்று விஷயங்கள் இருக்கும்: நான், தேவன், என்னோட வலி. எல்லா நிலையிலும் கைவிடப்பட்ட சூழ்நிலையில், உங்களுடைய விசுவாசம் ஒன்னு உறுதியான நிலையை அடையும், இல்லன்னா எந்த பக்கம் திரும்புவீங்கன்னு எனக்கு தெரியல.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. இதுக்கு என்ன காரணம் என்று நீங்க ஒருபோதும் தேவனிடம் கேட்டதே கிடையாதுன்னு சொல்லியிருக்கீங்க, நீங்க கேட்கும் ஒரே கேள்வி, “இந்த தொடர்ச்சியான வேதனையோடு நான் எப்படி வாழ போகிறேன்? அதற்கு என்ன பதில் கிடைத்தது?

**எஸ்லே:** அதாவது, ஏன்னு கேட்டதே கிடையாது, இத்தனை வருடங்களில் இதுவரைக்கும் கேட்கல. பாதாளத்திற்கு பாத்திரனாயிருந்தேன். அவருடைய கோபாக்கினைக்கு பாத்திரனாயிருந்தேன்; வேதத்தை பற்றி எனக்கு தெரிந்த காரியங்களில்

இருந்து இதை நான் தெரிந்துகொண்டேன்;ஆனா என்னை பொருத்தவரைக்கும், “சரி, ஆண்டவரே, இதுதான் என்னுடைய வாழ்க்கையாக இருக்குமென்றால், எப்படி வாழ்வதென்று சொல்லுங்க? என்னை சுற்றி இருப்பவர்களோடு கோபப்படாம இருப்பது எப்படி? மற்றவர்களை குற்றப்படுத்தாம இருப்பது எப்படி? எப்படி கனிவோடு மென்மையாக நடந்துகொள்வது? நீர் விரும்புகிற நபராக இருக்க நான் என்ன செய்யணுன்னு எனக்கு சொல்லுங்க? அப்பதா எபிரேயர் நான்காம் அதிகாரம் எனக்காக பேசுவதை உணர்ந்தேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. உங்களுக்காக நான் அதை வாசிக்கிறேன், அப்பறம் அதை பற்றி நீங்க சொல்லுங்க, சரியா? தேவன் உங்களுக்கு கொடுத்த வார்த்தைகளில் இது உங்களுக்கு பிடித்த பகுதி என்று சொல்லி இருக்கீங்க. எபிரேயர் 4:14-16, க வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்கு போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிகொண்டிருக்க கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்க கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், யற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க்

கிருபாசனத்தண்டயிலே சேரக்கடவோம்.” இப்ப இதை பற்றி சொல்லுங்க.

**எஸ்லே:** முதலாவதாக, பிரதான ஆசாரியர் தான் நமக்கு பரிந்துபேசுகிறவர். எந்த மாதிரியான மத பின்னணியாக இருந்தாலும் சரி, தேவனை பற்றி நமக்கு போதிக்கப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்திருந்தாலும் சரி அப்படி இல்லை என்றாலும் சரி, இவர் கிட்ட பேசனும் என்கிற எண்ணம் பொதுவாக எல்லாருக்குள்ளையும் இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. அவரிடத்தில் சேர முடியுமா என்பதை அறிந்திட விரும்புகிறோம். இந்த எபிரேயரின் இந்த பகுதி நமக்கு மத்தியஸ்தர் வேறு யாருமே தேவை இல்லை என்பதை மிக தெளிவாக கூறுகிறது; ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறார். இப்ப, அவர் மனிதனாக வந்த தேவன் என்று நமக்கு தெரியும், முழுவதும் தேவன், முழுவதும் மனிதர். இது சிறந்த காரியம். ஆனா நான் எங்கிருந்து வருகிறேன் என்பதை அவர் அறிந்திருக்கிறார், நான் யாருன்னு தெரியும், ஏன்னா அவர்தாமே இந்த மாதிரியான சூழ்நிலைகளை கடந்து வந்திருக்கிறாரே. அதனால நம்மால கூட சொல்ல முடியாத அளவிற்கு என்னை போல வேதனை சகித்த ஒருவர் இருக்கிறார் என்று நிச்சயமாக சொல்ல முடியும்.

அதனால, முதல்ல, அவர் பிரதான ஆசாரியர். இரண்டாவது, அறிக்கையை அசைவில்லாமல் உறுதியாக, பற்றிக்கொண்டு

இருக்கவேண்டும், கிறிஸ்துவை விசுவாசித்த போது நான் எதை நம்பினேன் கிறிஸ்துவை மட்டும்தானே? அவர் வாழ்ந்தார், மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மறுபடியும் மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பினார். கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லாருமே கிறிஸ்துவை மட்டும் விசுவாசித்தால் அவர்களுக்கு நித்திய ஜீவன் என்னும் இலவச ஈவு காத்திருக்கிறது. அதுதான் முக்கியமானதாகும், அதுதான் முடிவு. அதனால என்னுடைய அனுபவங்கள் எனக்கு என்ன சொல்ல முயற்சித்தாலும் சரி, நா கவனிக்கிற ஒரே விஷயம் இதுதான், என்னோட நம்பிக்கை என்ன? இந்த இயேசுவை குறித்து வசனம் எனக்கு என்ன சொல்கிறது? அவர் தான் தேவனுக்கும் எனக்கும் மத்தியஸ்தர்; அவர் என்னை பற்றி முழுவதுமாக அறிந்திருக்கிறார்; அவரிடம் திரும்பினால் போதும்.

இதனால் வரும் விளைவுகள் இரண்டு, கிருபை மற்றும் இறக்கம், இரண்டுமே சுவாரஸ்யமானது. கிருபை கோபாக்கினைக்கு பாத்திரமாக இருக்கும் இடத்தில் எதிர்பாராமல் பெறப்படும் தயவு. நம்மில் யாருமா ஒருத்தரை ஒருத்தர் மிஞ்சினவர்கள் கிடையாது, எல்லாரும் கோபாக்கினைக்கு பாத்திரமானவர்கள். மற்றவர்களை விட நாம பரவாயில்லை என்று நமக்கு தோன்றிடலாம், ஆனா அப்படி அல்ல. கிருபை என்பது தகுதியற்றவர்களுக்கு கிடைக்கும் தயவு - நாம அதற்கு தகுதியானவர்கள் அல்ல, அதை நாம் பெற முடியாது, மற்றவர்களை விட சிறந்தவர்களாக இருக்க முடியாது. இரக்கம் என்பது

நியாயத்தீர்ப்பை தடுத்து நிறுத்தியது, விலக்கப்பட்ட தீர்ப்பு. ஒரு காவல் துறை அதிகாரி உங்களையோ என்னையோ பிடிக்க முடியும் - அப்ப நீங்களும் நானும் ஒன்னு தான - உங்களை கூப்பிட்டு, சொல்வார், ஜான், அதிக வேகமாக வந்தீங்க." அதற்கு நீங்க சொல்வீங்க, "சரி, உண்மைதான்." அதற்கு அவர், "இந்த முறை உங்களை நான் விடுறேன் என்பார்." சட்டம் உங்களுக்கு அபராதத்தையும் தண்டனையையும் கொடுக்கும் விதத்தை கொண்டிருக்கிறது, ஆனா இரக்கம் அந்த தீர்ப்பை அகற்றி விடுகிறது, " இப்ப நா உனக்கு எந்த தண்டனையும் தர மாட்டேன்."

எபிரேயரின் ஆக்கியோன் சொல்கிறார் அவர் நம்மீது பரிதபிக்கிறவராக இருக்கிறபடியால் அவரிடத்தில் கிட்டி சேருகிறோம், அவருக்கு தெரியும், அவர் நமக்கு அந்த கிருபையையும் விலக்கப்பட்ட நீதியையும் சரியான நேரத்தில் நடப்பித்திடுவார். இந்தவிஷயங்கள் எனக்கு உதவியாக இருந்தது; இந்த சத்தியம் எனக்கு பெரிதும் உதவியது, ஜான், எல்லா துண்டுகளையும் ஒன்று சேர்க்க உதவியது. அவரிடத்தில் சேர்ந்தேன், அவர் என்னை முழுவதும் புரிந்துகொண்டார்; அவரால புரிந்துகொள்ள முடியாத எந்த சூழ்நிலையையும் நான் கடந்து வரவே இல்லை; அவருக்கு தெரியும். அங்கிருந்து நான் அந்த கிருபையை இரக்கத்தை பெற்றுக்கொள்ள துவங்கினேன்.

**ஆன்கர்பெர்க்:** சரி. இன்னும் கொஞ்சம் இதை விளக்கமாக சொல்லுங்க. அவர் உங்களுக்காக பரிதபித்தார், நம்மோடு சேர்ந்தது

அவர் வேதனையை சகிக்கிறார். இதை பற்றி இன்னும் கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க.

**எஸ்லே:** சரி, கிரேக்க வார்த்தைகள், சிம்பதி மற்றும் எம்பதி இதை ஆங்கிலத்தில் சேர்த்து சொல்வதுபோல உச்சரிக்கிறோம். ஆனால் உண்மையில், சேர்ந்து உணர்வது என்பதாகும். அவருக்கு முழுவதும் தெரியும். நீங்களும் நானும் அனுபவிப்பதை விட அதிக விலாகுலங்களை அவர் சகித்து இருக்கிறார். ஆனா என்ன சொல்கிறோம் என்றால் எந்த வலியும், ஏமாற்றமான நிலையும், மனிதன் அனுபவிக்கும் எந்தவிதமான சம்பவங்களையும், அவரால புரிந்துகொள்ள முடியும் அவருக்கு தெரியும். அவருக்கு அது புதுசு கிடையாது, "ஓ, உண்மையாவே மனுஷங்க எல்லாரும் இப்படி கஷ்டப்பாடுவாங்கன்னு எனக்கு தெரியாது என்பவரல்ல."

மேலும் மனிதர்களாகிய நமக்கு கிறிஸ்து சிலுவையில் சகித்த காரியங்களை கிரகித்து கொள்வது என்பது கூட இயலாத ஒன்றாக இருக்கும் தேவ கோபாக்கினை பரலோகத்தில் இருந்து ஒரே குமாரன் மீது ஊற்றப்பட்டது, அவர் தமது முகத்தையே திருப்பி கொண்டாரே. இயேசு தாமே சொல்லியிருக்கிற வார்த்தைகள் நமக்கு பதிவுகளாக இருக்கிறது, என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?" கிறிஸ்து எந்த மாதிரியான வேதனையை அங்கு சகித்தார் என்று யாராலும் அளிவிட்டு சொல்லி புரிந்துகொள்ள முடியாது. ஆனாலும் இந்த பிரதான ஆசாரியர் எல்லா பாடுகளையும் அனுபவித்திருக்கிறார்

என்பது இதிலிருந்து நமக்கு புரிகிறது, எல்லா ஏமாற்றங்களும் தெரியும், துன்புறுத்தப்பட்டிருக்கிறார், நம்மால கற்பனை பண்ண முடியாத பாடுகளும் பட்டிருக்கிறார், அதற்கு மேலையும் இருந்திருக்கும். அதனால பிரதான ஆசாரியர் நம்மை புரிந்துகொள்கிறார். அவர் தேவனுக்கு நமக்குமிடையில் உள்ள மத்தியஸ்தர். அவர் மனிதனாக இருந்த தேவன்; அவர் பரிதபிக்கிறார். தேவையுள்ள நேரங்களில் அவரிடத்தில் கிருபையையும் இரக்கத்தையும் நாடி வந்திடலாம். தேவை இருக்கும்போது இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** நீங்க வீட்டுக்கு வந்த சில நாட்கள் இருக்கிறது. வழக்காமா பார்க்கும்போது என்ன சொல்வீங்க 1-10ல, அந்த நாள் உங்களுக்கு எப்படி இருந்துதுன்னு சொல்வீங்க?

**எஸ்லே:** 6 குறைவாக இருக்கும் போது ஓரளவுக்கு சமாளிக்கலாம், அதுக்கு மேலன்னா மோசமா இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** சரி. நீங்க காலையில எழும்பும்போது எட்டு ஒன்பது இருக்குமா, நீங்க வரும்போதே சிண்டிக்கு அது தெரிஞ்சிடும், நீங்க அடித்தளத்தில் இருக்கிற உங்க தனி அறைக்கு போயிடுவீங்க. அங்க இந்த வசனம் உங்களுக்கு எப்படி உதவியிருக்குது?

**எஸ்லே:** எனக்கு தெரிந்ததை நான் பிடித்துகொள்வேன்; என்னுடைய தேவனை பற்றி நான் நம்பாத ஒரு விஷயத்தை என்னுடைய அனுபவங்கள் சொல்வதற்கு நான் இடம் கொடுக்க மாட்டேன். வலி

ரொம்ப அதிகமா இருக்கும்போது, ஏமாற்றங்கள் தலைதூக்கி எழும்பும்போது, மருத்துவர்களால் உதவி செய்ய முடியாத போது, நீங்க பேர் சொல்லி விளக்கி சொல்லும் எல்லா விஷயங்களும் உங்களுக்கு உதவ முடியாத என்பதை புரிந்துகொள்ளும்போது, நீங்களும், தேவனும், உங்க வலியும்தான் மிஞ்சும். என்னுடைய அனுபவங்கள் தேவன் யார் என்பதை விளக்குவதில்லை என்பதை எனக்கு நானே ஞாபகப்படுத்திடுவேன்.

**ஆன்கர்பெர்க்:** அதுதான் ரொம்ப முக்கியம். மறுபடியும் சொல்லுங்க.

**எஸ்லே:** தேவன் யார் என்று என்னுடைய அனுபவங்கள் எனக்கு சொல்லவதில்லை. அவருடைய வார்த்தை அவர் யார் என்பதை சொல்கிறது. மேற்கத்திய நாடுகளிலும் உலகம் முழுவதிலும் நமக்கு இருக்கிற பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. தேவன் யார் எப்படி பட்டவர் என்பதை அறிந்துகொள்ள நம்முடைய அனுபவங்களை முன்பாக வைத்து சொல்லுகிறோம். அது உண்மையில் ஒரு பொய். அதை நாம் அழித்திட வேண்டும். மனித மூளையால் தேவனை பற்றி விளக்க முடியாது. அவருடைய வார்த்தைதான் அவர் யார் என்பதை சொல்கிறது, அவர் என்ன செய்திருக்கிறார், அவர் செய்து முடித்தவற்றை சொல்கிறது. அதனால, என்னை பொறுத்தவரை என்னுடைய கூட்டில் நானும், தேவனும், வலியும் இருக்கிறோம். அவருடைய வார்த்தை இருக்கும்போது... வலி எங்கயும் மாயமாவது கிடையாது, ஆவிக்குரிய இபுப்ரோபின் மாதிரி இல்ல - திடீருன்னு

கொஞ்சம் இதமாக இருக்கும் அதோடு மனதிற்கு சந்தோஷமாக இருப்பதை உணர்ந்திடுவேன். ஆனா ஒரு விஷயம் நல்லா தெரியும் அதை நான் விசுவாசிக்கிறேன் அந்த பகுதியில் அவர் சொல்லியிருக்கிற அவருடைய வார்த்தைகள் அனைத்தும் சத்தியம். அதன் மீது என்னுடைய ஆத்துமாவை பதிக்கும்போது, என்னுடைய அன்றாட வாழ்வை என்னால் எதிர்கொள்ள முடியுமே?

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப நா ஜோனியிடம் பேச விரும்புகிறேன், சரியா? உங்களுக்கு என்ன நடந்தது என்பதை சுருக்கமாக ஜனங்களுக்கு சொல்லும்படியாக விரும்புகிறேன். ஏன்னா பதினேழு வயதுள நீங்க அழகான வாலிப பெண்ணாக இருந்திருப்பீங்க, இல்லையா? என்ன நடந்தது? மேலும் இன்றைக்கு அதிக வேதனையோடு இருக்கிற மக்களுக்காக நீங்க சில வார்த்தைகளை சொல்லும்படியாகவும் நான் விரும்புகிறேன். என்னுடைய ஊழியர்களில் சிலரிடம் அவர்களுக்கு தெரிந்த வேதனையில் துவண்டுகொண்டிருக்கும் சிலரிடம் கேள்விகளை கேட்க்கும்படி சொல்லியிருக்கிறேன், “இந்த நிகழ்ச்சியில் எனது விருந்தினர்களுக்கு வேதனை உபத்திரவம் மற்றும் தேவன் உங்களுக்காக என்ன செய்ய முடியும் என்பதை சார்ந்த நான்கு கேள்விகளை கொடுக்கும்படி கேட்டிருந்தேன்.” நான்கு கேள்விகள் இங்கு இருக்கிறது. இந்த வேதனை எப்போது தீரும்? எப்போது இந்த வேதனைக்கு தீர்வுண்டாகும்? இந்த

வலி எப்போது நீங்கும்? இந்த வேதனை எப்போது மாறும்? அவங்க தெரிந்துகொள்ள விரும்புகிற ஒரே விஷயம் இதுதான்.

சிலர் இருக்காங்க அவங்க அவங்களுடைய வேதனை தாண்டி எந்த விஷயத்தையும் தேவனிடத்தில் இருந்து கேட்க்க மனதில்லாமல் இருக்கிறார்கள், சரியா? நீங்க இரண்டு வருடங்கள் அப்படி இருந்தீங்க. யாரும் வேதத்தின் வாசனைகளை பற்றி உங்ககிட்ட பேசுவதை நீங்க விரும்பவில்லை, சரியா? அதை பற்றி எனக்கு சொல்லுங்க. என்ன நடந்தது என்று முதல்ல சொல்லுங்க, அந்த கதையை சொல்லுங்க, அப்பறம் உங்களை பார்த்து சொல்கிறவர்களுக்கு என்ன சொல்றீங்க, :அதாவது, நீங்க என்ன சொன்னாலும் கவலையில்லை என்பவர்களுக்கு உங்கள் பதில்."

ஜோனி எரிக்சன் டாடா: நா இளம் வயது நிரம்பிய சிறந்த வாலிப பெண்ணாக குறிப்பாக தீவிரமான விளையாட்டு வீராங்கனையாக இருந்தேன்னு சொல்லுவேன். நா உண்மையாவே முட்டாள் தனமா தண்ணீ கம்மியா இருந்த இடத்துல நீச்சல் அடிக்கும்படி குதித்தேன், சிறப்பா ஒரு டைவ் அடித்து மேல வந்திடலாம் என்பது என்னோட எண்ணமா இருந்துச்சு, ஆனா அப்படி நடக்கல. என்னுடை தலை மண் தரையில் வேகமா மோதியது. அதனால என்னோட மண்டை ஓடு பின்புரமா பாதிக்கப்பட என்னோட தனுடுவட கழுத்து எலும்புகள் சுக்குநூறானது தண்டுவடம் பாதிப்படைந்தது. முழுவதும் செயலற்றவளாக தண்ணீருக்கு மேல மிதந்துட்டு இருந்தேன். நல்ல

வேலையா என்னோட தண்ணீல இருந்த என்னோட அக்கா நான் முகங்குப்புற மிதந்துட்டு இருந்ததை பார்த்து ஓடிவந்தா. அன்றைக்கு முந்தின நாள் இராத்திரி என்னோட தலைக்கு நான் கலர் போட்டிருந்தேன், அதனால என்னோட கூந்தல் மிதப்பதை அவளால எளிதில் கவனிக்க எதுவாக இருந்தது. அது அவளோட கவனத்தை ஈர்த்தது, அவ துரிதமாக வந்து, என்னை காப்பாற்றி, தண்ணீரில் இருந்து வெளியே கொண்டு வந்தா. நா துப்பினேன், திணறினேன், மூச்சு விட ரொம்ப சிரமப்பட்டேன்.

அவங்க என்னை மருத்துவமனைக்கு கொண்டு போனாங்க; என்னோட நீச்சல் உடைய கிளிச்சான்கள் என்னோட மண்டையில போல்ட்டுகளை மாட்டினார்கள்; என்னை ட்ராக்ஷன் போட்டு நீளமான மேஜையில் படுக்க வச்சாங்க, ஸ்ட்ரைக்கர் பிரேம். இதெல்லாம் சுழல் காற்றின் வேகத்துல நடந்துட்டு இருந்தது. அப்பறம் திடீருன்னு, டாக்டர்கள் என்னிடம் சொன்னாங்க, “ஜோனி, உன்னோட தண்டு வடம் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கு; உன்னுடைய கரங்களை இதுக்குமேல ஒருநாளும் உன்னால பயன்படுத்த முடியாது; உன்னால இனிமேல் நடக்க முடியாது, “அப்பவே அழுத்தத்தின் உச்சத்திற்கு போயிட்டேன். இதுக்கு மேல நடக்க முடியாது என்பதற்கு என்ன அர்த்தம் என்று என்னால யோசிக்க முடியாள, இதுக்கு மேல கோக கோலாவ கையில பிடிக்க முடியாது தலைய வாரிக்க முடியாது பல்தேக்க முடியாது,... இல்ல என்னதா சொல்றாங்க. அப்ப தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம்

அதிகமா என்னை அழுத்த ஆரம்பித்தது. ராத்திரிகளில் படுக்கையில் படுத்திருக்கும்போது தலையை வேகமாக அசைத்துக்கொண்டு இருப்பேன் அப்படி செய்யும்போது கழுத்து உடஞ்சிட்டா செத்திடுவேன் அப்படி தற்கொலை செய்துகொள்ளலாம் என்றிருப்பேன். ஆனா அப்படி செய்யவும் பயமா இருக்கும் இதைவிட அதிக பிரச்சனை ஏதாவது வந்திட்டா. நான் தனியாக இருந்தேன்.

போன பகுதியில் மைகேல் எபிரெயரில் இருந்து வாசித்த பகுதியை கேட்டு கொண்டு இருந்தேன். அப்ப தேவனை உண்மையாக விசுவாசிக்க நினைத்தேன், ஆனா தேவனாக இருக்கும் அவர் தாமே வேதத்தையும் தாண்டி இங்கு வந்தார் என்றால், எப்படியும், ஏதாவது ஒரு விதத்தில் இதில் அவருக்கும் பங்கிருக்கும். இதுல அவருக்கும் பங்கு இருக்குன்னு சொன்னா அவர் எப்படி நம்பிக்கைக்கு பாத்திரமாக இருக்க முடியும்?

ஆனா ஒரு ராத்திரி, ஜான், ரொம்ப சோர்வாக தனிமையில் இருப்பதை உணர்ந்தேன், ரொம்ப சோர்ந்து போய் தனிமையில் என்னோட ஏமாற்றத்தோடு வேதனையில் இருந்தேன். ஏதோ சில காரணங்களுக்காக மைகேல் சொன்ன இந்த இயேசுவை குறித்து நான் கற்பனை செய்திட ஆரம்பித்தேன். அவர் என்னோட ஹாஸ்பிடல் அரை பக்கமாக வருவதை போல கற்பனை செய்தேன், என்னோட அறையில் இருக்கிற மற்றவர்களை கடந்து எங்கிட்ட வருகிறார். அவர் என்னோட படுக்கையின் ஓரத்தில் நிர்ப்பது போல பார்த்தேன்.

கரப்பானை செய்து பார்த்தேன் - அவரை நான் பார்க்கல, சும்மா கற்பனை செய்தேன் - அந்த கார்ட் கம்பியை எடுத்து கிலங், கிலங் மெதுவா இறக்கி விடுகிறார். அப்பறம் அந்த படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்து என்னோட கண்கள் மீதிருந்த என் கூந்தலை வருடி விடுகிறார். அப்பறம் அவருடைய கரங்களின் காயங்களை, உள்ளங்கையை காட்டி, என்னிடம் மெதுவாக சொல்கிறார், “ஜோனி, உனக்காக மரிக்கிற அளவிற்கு உன்னை நேசித்திருக்கிறேன், என்னை நம்புகிறதற்கு இது போதுன்னு உனக்கு இன்னும் தோணலையா என்றார்.”

எனக்கு, நீங்க, இரண்டு பேரும் கொஞ்ச நேரத்துக்கு முன்னால எபிரேயர் நான்காம் அதிகாரத்தை பற்றி பேசியது சுருக்கமா புரிஞ்சுது. எனக்கு பிரதான ஆசாரியர் இருக்கார். எனக்கு தேவன் இருக்கார். வேதாகமத்தின் தேவனானவர் ஏதோ கட்டுகதையோ தியான குரு போன்ற தேவனோ ஏதோ எங்கையோ ஒரு மலை சிகரத்தில் அந்தரத்தில் உட்கார்ந்திருப்பவரோ, கட்டை விரல்களை அசைத்துக்கொண்டு, என்னை விட்டு கைக்கு எட்டும் தூரத்தில் என்னோட வேதனைகளுக்கு விலகி இருப்பவர் அல்ல. இல்ல, அவர் என்னுடைய வேதனைகளுக்கு ஊடாக இருக்கிறார். அன்று இரவு தான் நான் இயேசு யாரும் போக முடியாத இடங்களுக்குள் பிரவேசிக்க கூடியவர் என்பதை அறிந்துகொண்டேன். மருத்துவர்களால் போக கூடாதா இடங்களுக்குள் பிரவேசிக்கிறார். எந்த ஆலோசகரும் நுழைய

முடியாத இடங்களில் நுழைகிறார். தியானம் கொண்டு போகாத இடங்களில் நுழைகிறார். அதுமட்டுமல்ல, நீங்களும், நானும் அவருக்கு நம்முடைய இருதயத்தை திறந்து உள்ளே வர அனுமதிகொடுத்தால், அவர் நம்முடைய வாழ்விற்காக வைத்திருக்கும் திட்டத்தையும் நோக்கத்தையும் நம்மால் பார்க்க முடியும். அது ஒரே ராத்திரியில் நடந்திடாது, சொடுக்கு போடும் நேரத்தில் நடக்காது. ஆனா அன்று இரவு இயேசு என்னை சந்திப்பது போல கற்பனை செய்து பார்த்தேன் அவர் எங்கிட்ட சொன்னார், "ஜோனி, என்னை நீ நம்பலாம், "அதுதான் சரியான பாதையின் முதல் படியாக இருந்தது.

**ஆன்கர்பெர்க்:** இரண்டு பேரும் இரண்டு படங்களை கொடுத்திருக்கீங்க. முதல் படத்தை விளக்கி சொல்லுங்க.

டாடா: சரி, இங்க இருக்கிறது ஒரு கரிதுண்டால  வரையப்பட்ட ஒரு படம் இதை நான் மருத்துவ மனையில் இருந்தப்ப செய்தேன். எப்படி கரிதுண்ட என்னோட பற்களுக்கு இடையில வைத்து எழுதுவது வரைவது என்று நான் அங்க தான் கற்றுகொண்டேன். ய்ந்னோட விபத்திற்கு முன்பு கொஞ்சம் கொஞ்சம் எனக்கு வரையவும் தெரியும், இந்த படத்தை நான் வரைந்த போது அதாவது, இது வியாகுலம் நிறைந்திருப்பது போன்ற படம், நா இதுலிருந்து என்ன சொல்ல விரும்பிநேன்னா, "ஓ, ஆண்டவரே, இதுதான் இப்ப என்னோட வாழ்க்கையா? என்னோட ஜீவ காலம் முழுவதும் நான் இனி இப்படிதான் வாழ போகிறேனா? என்னால இது முடியாது; முடியாது;

முடியவே முடியாது." எனக்கு தெரியும் நான் சொல்ற இந்த விஷயம் இதை பார்த்துகொண்டிருக்கிற அநேகருடைய வாழ்க்கையோடு பொருந்துவதாக இருக்குனு தெரியும், "ஓ, ஆண்டவரே, இதுதான் என்னோட வாழ்க்கையா? ஒருவேளை மூளை சிதைவு உண்டாயிருக்கலாம், அல்லது ஆழ்ந்த தனிமையின் உணர்வில் இருக்கலாம், மன நோயாக இருக்கலாம், அல்லது உங்களுடைய பிள்ளை ஊனமாக பிறந்திருக்கலாம், அல்லது கணவரால கைவிடப்பட்டு இருக்கலாம், அலல்து உங்களுடைய மெடிகல் ரிபோர்ட்ஸ் உங்களுக்கு சவாலாக இருக்கலாம், வாழ்க்கையே மாறிவிட்டது, என நினைக்கலாம், "இதுதான் என்னோட வாழ்க்கையா? என்னால இது முடியாது." நம்முடைய நேயர்கள் ஒன்றை புரிந்துகொள்ள விரும்புகிறேன் மைகேலும் நானும் இதையே தான் சொல்லுவோம். உண்மையில், இன்றைக்கு காலையில எழும்பும்போதும் இதைதான் நான் சொன்னேன், "ஓ, இயேசுவே, என்னால இது முடியாது." ஆனா, வேதத்தை குறித்து எனக்கு பிடித்த காரியம் இதுதான், எப்போதும் நம்பிக்கை நிறைந்ததாக இருக்கிறது. பலவிதமான நம்பிக்கையின் நங்கூரங்கள் இருக்கிறது எதைவேண்டுமானாலும் பற்றிகொள்ளலாம். இன்றைக்கு காலையில் நான் இறுக பற்றி கொண்ட வார்த்தை , ஆனா, :என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு." பிலிப்பியர் நான்கு பதிமூன்று. என்னால இது

முடியாதுதான், ஆனா கிறிஸ்துவால் என்னால் எல்லாம் செய்ய முடியும்.

**ஆன்கர்பெர்க்:** இந்த படம் என்றென்றைக்கும் என்னோட நினைவில இருக்க போகுது, சரியா? அடுத்த இரண்டாவது படம் எதை பற்றியது?

டாடா: சரி, இரண்டாவது படமான இது... இந்த குறிப்பிட்ட ஒன்றை நான் வரையல, என்னோட நண்பர் எனக்காக வரைந்து கொடுத்தாங்க ஹாஸ்பிடல்ல இருந்தப்ப. என்னை என்னோட வாழ்க்கையின் புதிர்களுக்குள் இருப்பதை பார்த்த அவர், எனக்கு ஒன்றை சொல்ல விரும்பினார், "ஜோனி, உன்னோட வாழ்க்கை சீராக இருக்க விரும்புற, ஒழுங்கும், கிராமமுமா, இருக்க நினைக்கிரே. எல்லாம் கிராமமாக இருக்கனுன்னு நீ ஆசைபடுவன்னு தெரியும். உன்னோட வாழ்க்கை உனக்கு அர்த்தம் கொடுக்கனுன்னு நினைக்கிறேன். ஆனா உனக்கு தெரியுமா, புதிர்களின் நிறைய பாகங்கள் தவரிட கூடும், நித்தியம் என்னும் மறுபக்கத்தை அடையும் வரை அதை நீ தெரிந்துகொள்ள முடியாது என்றார்." என்னோட நண்பர் எனக்காக செய்த இந்த படத்தை பார்த்த போது, எனக்கு உண்டான முதல் எண்ணம், சரி இருக்கட்டும், ஞானம் என்பது தேவன் இதை ஏன் அனுமதித்தார் என்று அறிந்துகொள்ளும்படி புதிரில் இருக்கிற எல்லா துண்டுகளையும் ஒன்று சேர்த்து அலசி ஆராய்ந்து பார்ப்பது அல்ல என்பதை புரிந்துகொண்டேன். ஞானம் என்பது புதிரின் பல பாகங்கள் விடுபட்ட நிலையிலும் தேவனை நம்பியிருப்பதாகும்; நித்தியத்தின் இந்த

பகுதியில் உங்களுடைய வாழ்க்கை சரியாக இருக்காது என்று தெரிந்திருந்தாலும் சந்தோஷமாக இருக்கனும். ஆனா அடுத்த பக்கத்தில் சந்தோஷமாக இருக்கும். அந்த நம்பிக்கை தான் நம்மை தொடர்ந்து ஓட வைக்கிறது. என்னை இந்த வேதனையில் இருந்து விடுவிக்கும் படியான அந்த திறவுகோல் ஒரு நாள் தேவனுடைய கரத்தில் இருந்து எனக்கு கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையோடு ஓடுகிறேன். அந்த நாளுக்காக என்னால் காத்திருக்க முடியவில்லை. அதை ஆவலாக எதிர்பார்த்து கொண்டிருக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், இந்த மாதிரியான செய்திகளை கேட்க்கும் மக்கள் எப்படி மன அழுத்தத்தில் இருந்து வெளியில் வரலாம் என்பதை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். நீங்களும் உங்க மனைவியோடு கவுச்ல உட்கார்ந்த நாட்கள் இருக்கிறது, உங்க கன்னங்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக வந்திருக்கிறது. ஆனா அவங்க உங்ககிட்ட சொன்ன ஒரு விஷயம் நீங்க அதிலிருந்து வெளிய வர முதல் படியாக இருந்திருக்கிறது. என்ன சொன்னாங்க?

**எஸ்லே:** ஜனங்க ஏன் தங்களுடைய வாழ்க்கையை முடித்துகொள்கிறார்கள்  என்ற காரணத்தை நா புரிந்துகொள்ள துவங்கியபோது, அவளிடம் கேட்டேன், “எப்படி உன்னால இது முடியுது? ஏன்னா அவ தன்னோட கணவனை பார்த்துகொண்டு இருக்கிறாள், எனக்கு எந்தவிதத்திலும் அவளால உதவி செய்ய முடியல. அவ கிட்டதட்ட மூணு நான்கு நிமிடங்களுக்கு அப்படியே

நின்றிவிட்டால், சில வினாடிகல்ன்னு சொல்லலாம், அவ தன்னோட கண்களை மூடிகொண்டால். அப்பறம் அவர் என்னை பார்த்து  என்ன சொன்னா தெரியுமா, “ இன்றைக்கு வரைக்கும் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்று எனக்கு நல்லா தெரியும் என்று சொன்னால். நாளைக்கு எப்படி அவர் உண்மையுள்ளவராக இல்லாமல் போவார்?” அதுதான் என்னை உண்மையில் அசைக்க கூடியதாக இருந்தது, ஒகே, எஸ்லே, அடுத்த வேலைய பாரு, அடுத்த வேலைய பாரு அவ்வளவுதான். இந்த குழி குள்ளயே போயிடாத ஏன்னா அது உனக்கு எந்தவித நன்மையையும் கொடுக்கதுன்னு எனக்கு தெரியும்.” அந்த ஒரு நிமிடம் தான் என்னுடைய வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்கினது, ஜான், அப்பதா மன அழுத்தத்தில் இருந்து நான் வெளிய வந்தேன்.

டாடா: அதாவது, மைகேல், இதுதான் எனக்கும் நடந்தது. அதாவது, உங்க வாழ்க்கையில் சத்தியத்தை சொல்ல சிந்தி இருந்தாங்க. என்னை பொருத்தவரைக்கும் ஜனங்க வேதனை படும்போது, தனிமையாக இருப்பது போல உணரும்போது தேவையோடு இருக்கறப்ப, ஒருவர் வந்து அவங்க வாழ்க்கையில் சத்தியத்தை எடுத்து சொல்வது எவ்வளவு அருமையான ஒன்றாக இருக்கும் தெரியும். அப்ப சில கிறிஸ்தவ நண்பர்கள் என் படுக்கையின் பக்கமாக வந்து நின்று சிலர் பீசா வாங்கீட்டு வந்தாங்க டோனட்ஸ் வாங்கீட்டு வந்தாங்க, முடங்கியிருந்த என் விரல்களுக்கு நெயில் பாலிஷ் வாங்கீட்டு

வந்தாங்க, அழுக்கான என்னோட முடிய சுத்தம் செய்தாங்க. அவங்க எல்லாரும் இயேசுவின் கரங்களா இருந்தாங்க.

ஜனங்க வேதனையில் இருக்கும்போது, அவங்க தனியா அவஸ்தை பட கூடாது. காயப்பட்ட மக்கள் தனியாவே அவஸ்தை படனுன்னு தேவன் எப்போதும் நினைத்தது கிடையாது. அதனால்தா ஆவிக்குரிய சமுதாயத்தை உருவாக்கியிருக்கிறார். அதற்காகத்தான் சபையை உருவாக்கியிருக்கிறார். இன்றைக்கு காயத்தோடு இருக்கிறவர்களை அணுகுகிற தூரத்தில் சில கிறிஸ்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவங்கள சமாளிக்க உங்களுக்கு வாழ்நாள் முழுவதும் தேவைப்படலாம், “எனக்கு உதவி வேணும்” அப்படி சொன்னங்கன்னா நல்ல விஷயம். அதாவது, அப்படி சொல்றது சிறப்பான காரியம்தான, “தேவனுடைய உதவி மட்டும் போதுன்னு சொல்லாம, எனக்கு மனிதர்களுடைய உதவியும் தேவை என்கிறார்கள்.” அவங்க உங்களுடைய வாழ்க்கையில் சத்தியத்தை பேசட்டும். அப்படி சொல்லும்போது உங்களுடைய வேதனையில் தேவன் உங்களோடு இருப்பார். அவர் காயப்பட்டார், இயேசு உங்களுடைய சகல வியாகுலங்களையும் சுமந்து காயத்தை ஏற்றுகொண்டார் அதினால் அவர் இரக்கமுள்ள பிரதான ஆசாரியராக உங்களுக்காக பிதாவிற்கு முன்பாக பரிந்து பேசும்படியாக தம்முடைய கிருபையை பொழிந்து உங்களுடைய பாரங்களை நீக்கி தமது சமாதானத்தை தந்து தமது வல்லமையை கண்நோட்டத்தை தந்தருளினார். இதுக்கு தேவையானது

விசுவாச அடிகள் தான், கடுகு அளவு விசுவாசம் இருந்தால் போதுமானது, நீங்க நினைத்து பார்க்க முடியாத அளவு சின்னதா இருந்தாலும் போதும். ஆனா தேவன், உண்மையா சொல்றே, அவருக்கு கொஞ்சம் இடம்கொடுங்க, அவர் ஒரு மையில் தூரம் கூட்டீட்டு போவார். அவருடைய நம்பிக்கை மற்றும் ஊக்குவிக்கும் ஆற்றலை நமக்குள்ள உட்புகுத்திட இந்த ஒரே ஒரு விசுவாச அடி எடுத்து வைத்தால் போதும் அவர் பார்த்துகொள்வார்.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், இதை நிறைவு செய்திடுங்க. மிகப்பெரிய அதிர்ச்சியில் உறைந்திருக்கும் நபருக்கு நீங்க என்ன சொல்வீங்க, நாம சொன்னதை அவங்க கேட்டிருக்காங்கள்ள? எப்படி துவங்கலன்னு சொன்னுங்க.

**எஸ்லே:** உங்க வாழ்க்கையின் இறுதி கட்டத்துக்கு நீங்க வந்திருக்கலாம். இப்ப உதவி தேவை என்பதை நீங்க முதலாவது புரிந்துகொள்ள வேண்டும். உங்களுக்கு உதவ ஒருத்தர் இருக்க வேண்டியது அவசியம். ஜோனி சொன்னதோட சேர்த்து உங்களுக்கு சொல்ல விரும்புறேன், அதாவது, ஜனங்க பொதுவாவே உதவிய நாடியவர்களாக உருவாக்கப்பட்டு இருக்காங்க சுய உதவியோடு வாழ முடியுன்னு சொல்றது கொஞ்சம் ஏற்றுகொள்ள கடினம்தான். மேலும் நம்மில் சிலருக்கு மற்றவர்களை விட அது சவாலாக இருக்கும், மதத்தவங்க கிட்ட உதவிய கேட்க்க மாட்டோம். ஆனா கிறிஸ்துவிடம் திரும்பினால், அவர் நமது பிரதான ஆசாரியர். மனிதர்களால் கொஞ்சம்

தான் செய்ய முடியும். அவங்களால முடிந்ததை செய்வாங்க. ஆனாலும் உள்ளாக இருக்கும் வேதனையை யாராலும் புரிந்துகொள்ளவோ அனுபவிக்கவோ முடியாது, இதயத்தின் ஆழத்தில் இருக்கிறது, உங்க ஆழ்மனதில் பதிந்திருக்கும், சரியான மருந்து கொடுக்க யாரும் அந்த இடத்தை சென்றடைய முடியாது, கிறிஸ்து உங்களை நேசிக்கிறார். அவர் தான் சரியான பிரதான ஆசாரியர், அவர்தான் சரியான மத்தியஸ்தரும் கூட; உங்க நம்பிக்கையை அவர் மீது வைத்திடுங்கள், அவரிடமாக திரும்புங்கள், அவர் உங்களை கைவிட மாட்டார்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, இப்பதா நாம நிகழ்ச்சியை துவங்கியிருக்கிறோம். அடுத்த வாரம் நான் ஜோனியையும் மைகேலயும் அவங்களோட மனஅழுத்தம் மற்றும் ஏமாற்றத்தை எதிர்கொள்ள தேவன் எப்படி உதவினார் என்பது பகிர்ந்துகொள்ளும்படி கேட்க இருக்கிறேன். ஏன்னா இன்றைக்கு நீங்க சொன்ன எல்லா விஷயத்திலும் ஏதாவது ஒரு கட்டத்தில் இரண்டு பேரும் சுவற்றை பார்த்து மன அழுத்தம் மற்றும் ஏமாற்றத்தை உணர்ந்த நாட்கள் நிச்சயம் இருக்கும். தேவன் உங்களுக்கு உதவினார். ஏன் இப்படி ஆனது, எப்படி, எப்படி நடந்ததென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன், சரியா? அதற்கு பிறகு நடந்தது என்ன? வீட்டிலிருந்து இதை கேட்டு கொண்டிருக்கிற உங்களுக்காக இவைகளை கேட்டு தெரிந்துகொள்ள

விரும்புகிறேன். இது நம் எல்லாருடைய அனுபவமாக இருக்கிறது. தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.